# நற்றமிழ்க்குடில்

## மாணவ இலக்கிய இதழ்

குடில் : 1 விருந்து : 1



சோகா தமிழ்ப்பேரவை வெளியீடு

15.09.2018

# நற்றமிழ்க்குடில்


| | | |
|---|---|---|
| ஆசிரியர்கள் | : | கு. பாரதி<br>முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு<br><br>வே. குணசேகரி<br>இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு |
| இணையாசிரியர்கள் | : | மு. துர்கா<br>முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு<br><br>அ. ஸ்டெல்லாமேரி, அ. பர்ஸானா<br>இளங்கலைத் தமிழ் இரண்டாமாண்டு |
| துணையாசிரியர்கள் | : | மு. சத்யா<br>முதுகலைத் தமிழ் முதலாமாண்டு<br><br>சா. யோகேஸ்வரி,<br>அ. உமா மகேஸ்வரி<br>இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு |
| ஆலோசனைக் குழு | : | டாக்டர் சேதுகுமணன்<br>கல்லூரித் தலைவர்<br><br>முனைவர் ம. சம்ஷாத்<br>கல்லூரி முதல்வர்<br><br>பேராசிரியர் சே. கண்மணி<br>தமிழ்த்துறைத் தலைவர்<br>தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் |



| | | |
|---|---|---|
| வெளியீடு | : | சோகா தமிழ்ப் பேரவை |
| நாள் | : | 15.09.2018 |

## உள்ளடக்கம்


வாழ்த்துரைகள்

தலையங்கம்

கவிதைச் சாரல்

மேற்கோள்களும் பொன்மொழிகளும்

தோழிக்கு

சிந்திக்க ஒருகதை

மலரே

பழங்கதை கேளு

பாட்டி வைத்தியம்

சித்திரச் சிறுகதை

விடைதேடும் விடுகதைகள்

அருந்தமிழ் அறிவோம்

சிரிப்போ... சிரிப்பு...

நூல் அறிமுகம்

சொல்லோடு மல்லாடு

அறிஞர் அறிவோம்

துறை நிகழ்வு



கலை மற்றும் அறிவியல் மகளிர்
தமிழ்த்துறை

தொட்டில் குழந்தையாய்
நற்றமிழ்க்குடில்...



மா. ரூபிணி
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

# கல்லூரி முதல்வர் வாழ்த்து

சில்லென்ற மழைச் சாரல்...

இதமான குளிர் தென்றல்

கொஞ்சும் மழலையின் சிரிப்பு

மனதை வருடும் இசை

குளிர் இரவின் நிசப்தம்

இளங்காலைக் கதிரவனின் வெப்பம்

சிறு பெண்ணின் துள்ளல்

தேர்ந்த தூரிகையின் வண்ணம்

தரும் சுகங்கள்...

தந்ததது நற்றமிழ்க்குடில் !!

வளர்க உம்முடைய பணி...
வரவேற்கிறேன் ! வாழ்த்துகிறேன் !

ம. சம்ஷாத்
கல்லூரி முதல்வர்

# துறைத் தலைவர் வாழ்த்து

இலக்கிய உலகில் இதழியலின் பங்கு இன்றியமையாதது. இதழியல் வழியே தன் எழுத்தாற்றலை வளர்த்து, சமுதாயத்தில் எழுச்சியை ஊட்டிய அறிஞர்கள் பலர். மகாகவி பாரதி, பாரதிதாசன் போன்ற கவிஞர்கள் இதழ்களின் மூலம் மக்களிடையே விடுதலை வேட்கையை வளர்த்தனர். தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்றவர்கள் பகுத்தறிவைப் புகட்டுவதற்கு இதழ்களையே பயன்படுத்தினர். இதழ்கள் இளைய சமுதாயத்தை ஆற்றல் மிக்கவர்களாக மாற்றும் சக்தி படைத்தவை.

தங்களுடைய சிந்தனையை, எழுத்தாற்றலை, பரந்த அறிவினை விரிவு செய்து கொள்ளும் களமாக மாணவர்கள் இதழ்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உருவானதே **"நற்றமிழ்க்குடில்"** என்னும் மாணவ இலக்கிய இதழ்.

இவ்விதழின் வழி மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்க வேண்டும் என்பதே நோக்கம். மாணவர்களால் உருவாக்கப் பெற்ற இவ்விதழில் அவர்களின் படைப்புகளான கவிதை, கட்டுரை, சிறுகதை, பொதுஅறிவு, ஓவியம் ஆகியவை இடம்பெற்றுள்ளன. மேலும் கடித இலக்கியம் தற்காலத்தில் அருகிவரும் இலக்கியமாக உள்ளது. "தோழிக்கு" என்ற கடிதத்தின் வழி மாணாக்கியர் கடித இலக்கியத்தைக் கையில் எடுத்துள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

தமிழ்த்துறையின் நீண்ட கால கனவு மாணவ இதழ் தொடங்க வேண்டும் என்பது. இந்த ஆண்டு அக்கனவு நினைவாகியுள்ளதில் மகிழ்ச்சி. மாணாக்கர்கள் சிறந்த படைப்பாளர்களாக உயர வேண்டும். சமூக நலனில் அக்கறை கொண்டு உழைக்க வேண்டும். நல்லறிவுமிக்க மாணாக்கிகளை உருவாக்கிய பெருமையைத் தரவேண்டுமென வாழ்த்துகிறேன்.

***சே. கண்மணி***
***தமிழ்த்துறைத் தலைவர்***

# தலையங்கம்



## நற்றமிழ்க்குடில்

மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தல் என்னும் சிறந்த நோக்கத்தினைக் கொண்டு உருவாக்கப்படும் மாணவத் தமிழ் இதழாகும். மாணாக்கியரின் தனித் திறன்களை வெளிக் கொணர்ந்து, மெருகேற்றி, மிளிர வைக்கும் ஒரு மாபெரும் களமாக இவ்விதழ் தொடங்கப்பட்டுள்ளது. இவ்விதழில் மாணவர்களின் படைப்புகளான கவிதை, கட்டுரை, ஓவியம், பொது அறிவுகள், புதிய தகவல்கள் என ஏராளமான படைப்புகள் இடம்பெறுகின்றன. இதனால் மாணவர்களின் படைப்புத்திறன் அதிகரிக்கும். கற்பனை வளம் தூண்டப்படும். பிற மாணவர்களுக்குத் தாமும் படைக்கவேண்டும் என்ற எண்ணம் பிறக்க வழிகோலாகும்.

தமிழ்மொழி மீது மிகுந்த ஆர்வம் ஏற்பட்டு மாணவர்களிடையே இலக்கியத்தோடு ஓர் இணக்கத்தையும், சமுதாயத்தின் மீது மாணாக்கியரின் கண்ணோட்டத்தையும் அறிய இவ்விதழ் வாய்ப்பளித்து உதவும். மாணாக்கியருக்குக் கருத்துச் சுதந்திரம் அளித்து, தன்னம்பிக்கைக் கொடுத்து, அவர்கள் தனக்கான இலட்சியத்தை இலக்கியத்தின்வழி எடுத்துக்கூற இந்நற்றமிழ்க்குடில் இதழ் மிகவும் உறுதுணையாக அமையும்.

சமுதாயத்தில் மாணவர்களை மதிப்பு மிக்கவர்களாக உருவாக்குவதே கல்வி புகட்டுவதன் முக்கிய நோக்கமாகும். அந்தவகையில் சமுதாயத்தின் மதிப்புமிக்கக் கல்வியைத் தந்ததோடு, எங்களின் தனித்திறன்களைக் கண்டறிந்து, பாராட்டி மகிழும் எங்கள் கல்லூரித் தலைவர் கல்வி வள்ளல் **டாக்டர் சேது குமணன்** அவர்களின் நல்லாசியோடு இந்நற்றமிழ்க்குடில் மாணவ இதழ் தொடங்கப் படுகிறது.

நல்ல தலைமை வெற்றியை நோக்கி நடைபோடச் செய்யும். அந்த வகையில் எங்களுக்கு நல்ல தலைமையாய் அமைந்து, கல்வியிலும் தனித்திறன்களிலும் நாங்கள் சிறந்து விளங்கிடத் துணைபுரியும் எங்கள் கல்லூரி முதல்வர் **முனைவர் ம. சம்ஷாத்** அவர்களின் வாழ்த்துகளும் எங்களை **நற்றமிழ்க்குடில்** என்னும் வெற்றியை நோக்கி நடைபோடச் செய்கிறது.

ஓவ்வொரு மாணவருக்குள்ளும் பல்வேறு தனித்திறமைகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றைச் சரியான முறையில் வெளிவரச் செய்து, அதில் நேர்த்தியாகவும் சிறந்தும் விளங்கிட உதவுவதே நல்லாசிரயர்களின் தலைசிறந்த கடனாகும். அத்தகு தனித்திறன்களை எங்களிடையே கண்டறிந்து, அவற்றை நாங்களே உணரும்படிச் செய்து, அனைத்துச் செயல்பாடுகளிலும் எங்களைத் திறம்படச் செயல்படச் செய்து, எங்களுக்கு வழிக்காட்டும் விழியாக விளங்கும் எம் தமிழ்த்துறைத் தலைவர் **பேராசிரியர் சே. கண்மணி** அவர்களின் மனம் நெகிழ இன்று இவ்விதழைத் தொடங்குவதில் நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

"சுடர்விளக்காயினும் தூண்டுகோள் வேண்டும்" இவ்விதழினைத் தொடங்கத் தூண்டுகோலாய் அமைந்ததோடு, எங்களின் வளர்ச்சிக்கு எல்லா நிலைகளிலும் உற்ற துணையாய் நிற்கும் எம்துறைப் பேராசிரியர்களையும் இந்நேரத்தில் நாங்கள் நன்றியோடு நினைந்து மகிழ்கிறோம்.

இந்நற்றமிழ்க்குடில் முழுக்கமுழுக்க மாணவர்களுக்கான இதழ். மாணவர் திறம் மேம்படுத்துவதற்கான இதழ் என்பதை முதலில் மாணவர்கள் உணரவேண்டும். முழு ஈடுபாட்டுடன் எந்தச் செயலிலும் முன்வந்தால் வெற்றி அடையலாம். இதனை மனதில் கொண்டு ஒவ்வொரு மாணவரும் உற்சாகத்துடன் இவ்விதழில் பங்குகொள்ள வேண்டும். அனைத்து மாணவர்களும் இது நம்முடைய இதழ் என்ற மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும். இவ்விதழ் மூலம் மாணவர்களின் அறிவுத்திறன் மேம்படுத்தப்படும் என்பதில் சிறிதேனும் சந்தேகமில்லை.

மாணவர்களை உற்சாகப்படுத்தும் வகையில் நடத்தப்பட உள்ள இவ்விதழ், அவர்களின் ஆர்வமிக்க படைப்புகளின் வரவேற்பை நாடி, எதிர்ப்பார்ப்புடன் காத்துக் கொண்டிருக்கிறது.

தொடங்குதல் எளிது...
தொடருதல் கடினம்...
தொடங்கிவிட்டோம் வெற்றியுடன்...
தொடர்ந்திடுவோம் முயற்சியுடன்...

***கு. பாரதி***
***முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு***

## நன்றி சொல்லிப் பழகுவேம்

நன்றி சொல்லிப் பழகுவோம்!
நன்றி சொல்லிப் பழகுவோம்!

நம்மை ஈன்ற அன்னைக்கு
நன்றி சொல்லிப் பழகுவோம்!

பண்புகளைச் சொல்லித் தந்து
நண்பனாய்த் தோள் கொடுக்கும்
பாசமிகு தந்தைக்கு
நன்றி சொல்லிப் பழகுவோம்!

அறிவு என்னும் உளி கொண்டு
மாணவனைச் செதுக்குகின்ற
கல்விதரும் ஆசிரியருக்கு
நன்றி சொல்லிப் பழகுவோம்!

பறவைக் கூடாய் பாசத்தை
பகிர்ந்திடும் நல் உறவுகளுக்கு
நன்றி சொல்லிப் பழகுவோம்!

*சா. யோகேஸ்வரி*
*இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு*

***மரம்***

ஆயிரம் மரங்கள் மரணம்...
ஆறுவழிச் சாலை ஜனனம்!
ஆயிரம் வாகனங்கள் பயணம்
ஒவ்வொன்றிலும் ஒரு வசனம்...
மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

கொளுத்தும் வெயிலில் ரோட்டோரம்
வாகனத்தை நிறுத்திவிட்டு...
கதைக்க நிழல் தேடும் இளைஞர்களே!
கொட்டும் மழையில் நனையாமல்
இருக்க மரம் தேடி அலைவோரே!
உங்கள் வாழ் நாளில்
ஒருமரமாவது நடுங்கள்!
நம் அடுத்த தலைமுறையும்
நிழலில் நின்று கதைபேச வேண்டும்...
மரம் மனிதனுக்கு உயிரென்று
வளரும் சந்ததிகளாவது உணரட்டும்!
மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

***அ. ஸ்டெல்லாமேரி***
***இளங்கலைத்தமிழிலக்கியம் இரண்டாமாண்டு***

## அம்மா

அனுவாய் அவதரித்த என்னை
கருவில் சுமந்தாய்!

கருவறையில் சுமந்த என்னை
உருவாய்ப் பெற்றெடுத்தாய்!

அற்பமாய் உருவானவளை
நுட்பமாய்த் தொட்டணைத்தாய்!

நான் வாழக் கற்றுக்கொள்ள
நீ வாழ்வைத் தொலைத்தாயோ?

பொக்கிஷமாய்ப் பாதுகாத்த என்னை
பாதியில் விட்டுச் சென்றது ஏனோ?

க. ரம்யபாரதி
இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு

## இலக்கியமும் சமுதாயமும்...

சங்கம் வைத்து சங்கமித்தோம்
தங்கத் தமிழில்...
கழகம் வைத்து கிளறுகிறோம்
அதன் வழித்தடத்தை...

எழுதிவைத்த கணக்கு மேல்கீழிருக்க
எட்டிவளைய நேரமில்லை
வலைதள புழுவிற்கு...

தசை அறுத்து விருந்து வைத்தோம்
கயிறில்லா காற்றாடிக்கு...
விதை விதைத்த கணமே
எடுக்கப்பட்டது அறுவடைக்கு...

அறியாப் பிழை பிள்ளைக்கு
ஊர்முன் தேர்க்கால்...
வறுமை கோடு தாண்டா மக்கள்
விரலில் மட்டும் மைகோடு...

அடுக்கடுக்காய் நூல் ஏடு
அடங்கி கிடக்கிறது நூலகத்தோடு...
பொழுதுபோக்க சோலை
அதை வைத்து செய்வார் தொழிலே...

பிணிபோக்கும் கனி
தான் உண்ணாது ஈய...
பிறர் பணம் உண்டு
மன்னா உன் குடில் நிறைய...

## மேற்கோள்களும் பொன்மொழிகளும்...

- "யாதும் ஊரே யாவரும் கேளிர்
  தீதும் நன்றும் பிறர்தர வாரா."

  - கணியன் பூங்குன்றன்

- மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
  மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்

  - முடியரசன்

- "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
  வாடினேன் பசியினால் இளைத்தே"

  - இராமலிங்க அடிகளார்

- "நாடா கொன்றோ: காடா கொன்றோ
  அவலா கொன்றோ: மிசையா கொன்றோ"

  - ஔவையார்

***அ. ஸ்டெல்லாமேரி***

***இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு***

## அப்துல் கலாமின் பொன்மொழிகள்...

- நீ யாராக இருந்தாலும் பரவாயில்லை. நீ எண்ணுவது விண்மீனாக இருந்தாலும் உன் உழைப்பால் நீ எண்ணியது உன்னை வந்து சேரும். நீ நீயாக இரு!
- வாய்ப்புக்காகக் காத்திருக்காதே....
  உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

***ச. வள்ளிவசந்தி***

***இளங்கலைத் தமிழிலக்கியம் முதலாமாண்டு***

## தோழிக்குக் கடிதம்...

அன்புள்ள தோழி!

நான் நலம். நீ, அம்மா, அப்பா அனைவரும் நலமா? உன்னுடைய கல்லூரி வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது? உன் கல்லூரியில் விடுமுறை வரும்போது நீ என் வீட்டிற்கு வரவேண்டும்.

நீ எங்கள் வீட்டிற்கு வந்தால் உன்னை என் சொந்த ஊருக்கு அழைத்துச் செல்ல எனக்கு ஆசை. அங்கு வழிநெடுகிலும் வயல் வெளிகள் பச்சைப்பசேல் என்று இருக்கும். மண்ணின் மணம் மனதை மயக்கும். மரங்கள் நிறைந்திருக்கும். தூய்மையான காற்று நெஞ்சை உருக்கும்.

அவ்வாறு இருந்த என் கிராமம் இன்று அப்படியே தலைகீழாக மாறிவிட்டது. சமுதாய சீர்கேடுகளின் காரணமாக கிராமங்களின் அழகும் ஆனந்தமும் குறைந்து விட்டது. வரப்புகள் வளர்ந்த காலங்கள் மாறி இன்று மடிந்துவிட்டது. மரங்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் குறைந்துகொண்டே வருகிறது. நாம் பல இலக்கியங்களில் வயல்வெளிகளின் வருணனைகளை படித்திருக்கிறோம். நம் வாழ்விலும் வயல்வெளிகளைக் கண்டு மகிழ்ந்திருக்கிறோம். ஆனால் நம் எதிர்காலச் சந்ததியினர் அதனை இலக்கியத்தில் மட்டுமே தவிர நேரடியாகக் கண்குளிரக் கண்டு மகிழ முடியாது.

இன்று விவசாயிகள் மகிழ்ச்சியாக வாழ்ந்த காலம் மாறி, கடன்பட்டு, கஷ்டப்பட்டு, வருத்தப்பட்டு இறுதியில் தற்கொலை செய்யும் அளவிற்கு தள்ளப்படுகின்றனர்.

இதுபோன்ற சமுதாயக்கேடுகள் இனி நிகழாதவாறு இளஞர்களாகிய நாம் சிந்தித்து செயல்பட வேண்டுமல்லவா? இனியாவது இயற்கையைக் காப்பதும், விவசாயத்தைப் போற்றுவதும் கடமையாகக் கொண்டு நாம் செயலாற்றுவோம்.

*இதுபற்றி நீயும் உன் கல்லூரித் தோழிகளுடன் உரையாடு!*

**உன் அன்பு தோழி**

**க. ரம்ய பாரதி**

**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## சிந்திக்க ஒரு கதை

### நீயே உனக்கு எஜமான்

ஒரு நாள் ஆபீஸில் வேலை செய்யும் பணியாளர்கள் அனைவருக்கும் அலுவலுக மேலாளரிடமிருந்து ஒரு சுற்றறிக்கை வந்தது. அதில், ''உங்கள் வளர்ச்சிக்கும் நம் கம்பெனி வளர்ச்சிக்கும் இடையூறாக இருந்த நபர் நேற்று காலமானார். அவரின் உடல் நம் கம்பெனியின் பார்வையாளர் அறையில் வைக்கப்பட்டுள்ளது. அனைவரும் தவறாமல் அங்கு சென்று அவருக்கு அஞ்சலி செலுத்த வேண்டும்'' என்று எழுதி இருந்தது.

அந்த அறிக்கையைப் படித்தவுடன் அலுவலகப் பணியாளர்களிடையே ஒரே சலசலப்பு. நம்முடன் வேலை பார்த்த ஒருவர் இறந்துவிட்டாரா? அதுவும் அவர் நம் வளர்ச்சிக்குத் தடையாய் இருந்தவரா? அந்த நபர் யாராக இருக்கும்? அவர் இறந்தது ஏன் இதுவரை நமக்குத் தெரியாமல் போனது? அப்படியே அவர் இறந்தாலும் அவரது உடல் அவர் வீட்டில் வைக்கப்படாமல்

நம் அலுவலகத்தில் ஏன் வைக்கப்பட்டுள்ளது? எனப் பல்வேறு கேள்விகள் அவர்களிடையே எழுந்தது.

விடைதெரியாக் கேள்விகள் மனதைக் குழப்ப, இறந்தவர் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆர்வத்தோடும் பரபரப்போடும் அலுவலகப் பணியாளர்கள் சவப்பெட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஒருவர் பின் ஒருவராகச் செல்லத் தொடங்கினர். " நம் வளர்ச்சிக்குத் தடையாய் இருந்தவன் யாராக இருக்கக் கூடும் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் சுழன்றபடியே இருந்தது.

சவப்பெட்டிக்குள் எட்டிப் பார்த்தவர்களுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதில் ஒரு முகம் பார்க்கும் கண்ணாடி மட்டுமே இருந்தது. சவப்பெட்டிக்குள் யாரெல்லாம் பார்க்கிறார்களோ அவர்களின் முகமே அவர்களுக்குத் தெரிந்தது.

அந்தக் கண்ணாடியின் அருகில் ஒரு வாசகமும் எழுதிவைக்கப்பட்டிருந்தது. "உங்கள் வளர்ச்சியை உங்களைத் தவிர வேறு யாராலும் தடுக்க முடியாது" என்னும் அந்த வாசகம் படிப்பவரின் மனதைச் சுட்டது.

உங்கள் வாழ்க்கையை உங்கள் முதலாளியால் மாற்ற முடியாது. உங்கள் நண்பர்களால் மாற்ற முடியாது. நீங்கள் நினைத்தால் மட்டுமே உங்களின் வாழ்க்கையை மாற்ற முடியும். ஒவ்வொருவரின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவரவரின் முயற்சியும் தன்னம்பிக்கையும் மட்டுமே காரணம். "நம்மைத் தவிர நம் முன்னேற்றத்தைத் தடுக்க வேறு யாராலும் முடியாது." என்பதை இந்நிகழ்வின் மூலம் அந்த அலுவலுகப் பணியாளர்கள் நன்கு உணர்ந்தனர்.

*நீ. வர்ஷினி உமையாள்*
*இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு*

## மலரே...

மலர் மென்மையானது. அழகானது. மனங்கவரும் மணத்தால் மயக்கக் கூடியது. தமிழரின் வாழ்வில் காதல், வீரம் இரண்டிற்குமே அடையாளமாய் மலர்கள் இருந்திருப்பதை மறுக்க முடியாது. தமிழர் வாழ்வியலின் வரலாற்றுப் பெட்டகமான சங்க இலக்கியமே இதற்குச் சான்றாய் அமைகின்றது. தலைவியின் மனங்கவர விரும்பிய தலைவன், மணம் வீசும் அழகிய மலர்களைக் கையுறையாக அளிக்கும் காட்சிகளைச் சங்க இலக்கியங்கள் படைத்துக் காட்டுகின்றன.

காதலில் மட்டுமின்றி வீரத்திலும் மலர்களின் பங்கு மகத்தானது. தமிழரின வாழ்வை அகம், புறம் என வகுத்தத் தமிழிலக்கியம் போருக்குச் செல்லும் வீரர்கள் தலையில் சூடிய பூவினைக் கொண்டே அவர்கள் என்ன வகைப் போரினை செய்கிறார்கள் என அடையாளம் காட்டியது.

சங்க இலக்கியங்களில் ஒன்றான குறிஞ்சிப் பாட்டில் கபிலர் 99 வகையான மலர்களை அழகுற எடுத்துரைத்துள்ளார். அவரின் பாட்டு மலர்களின் வகைகளை அடுக்கிச் சொல்வது வியப்பில் ஆழ்த்துகிறது. அவ்வகையில் குறிஞ்சிப்பாட்டு குறிப்பிடும் 99 வகையான மலர்களை ஒவ்வொன்றாக அறிமுகப்படுத்துகிறது இந்த மலரே...

இந்த இதழில்... வெட்சி மலர் அறிமுகமாகிறது...

# மலரே... வெட்சி மலரே...



வெட்சி மலர் குறிஞ்சி நிலத்தில் மலர்கின்ற அழகிய மலர்... முகைமுதிர் வெட்சி (அகம்), ஈரமை வெட்சி (பரிபாடல்), புல்லிலை வெட்சி (கலித்தொகை) எனச் சங்க இலக்கியங்கள் வெட்சி மலரினை விவரிக்கின்றன. வெட்சி மலர்கள், அழகிய சிவந்த நிறத்திலும் தூய்மையான வெள்ளை நிறத்திலும் மலர்வதுண்டு.

புறப்போரில் ஆநிரை கவரும் போர் வெட்சிப்போர் எனப்பட்டது. வெட்சிப் போருக்குச் செல்லும் வீரமறவர்கள் சிவந்தநிற வெட்சிப்பூவினைச் சூடுதல் வழக்கம். அழகிய பெண்கள் வெள்ளை நிற வெட்சி மலரினைச் சூடி மகிழ்வர்.

சங்க காலத்தில் தமிழர் வாழ்வில் அகத்திலும் புறத்திலும் அழகாய் வலம் வந்த வெட்சி மலர், இக்காலத்துத் தமிழரின் இல்லங்களில் அழகை நிறைக்கும் மலர்களாகக் காட்சியளிக்கின்றது. இம்மலர் இக்கால வழக்குத்தமிழில் இட்லிப்பூ என்று அழைக்கப் படுகிறது.

# பழங்கதை கேளு....

வாழ்க்கையின் அனுபவங்களைச் சிறுசிறு வாக்கியங்களில், எதுகை, மோனை நயங்களோடு எடுத்துரைக்கும் மொழிகளே பழமொழிகள். வளர்ந்துவரும் நாகரிகச் சமுதாயத்தில் வாழ்க்கையின் அர்த்தங்கள் புரியாமலே வாழும் மனிதர்களையே மிகுதியும் காணமுடிகின்றது.

பழங்கதைகளாய்ப் போன பழமொழிகளை நினைவு கூர்வதன் மூலம் இளைய சமுதாய இளைஞர்களாகிய நாம் தெரிந்துகொள்ளும் வாழ்வியல் அனுபவங்கள் பல. இதனைக் கருத்திற்கொண்டு சில பழமொழிகள் இங்கே எடுத்துரைக்கப்படுகின்றன.

## சோற்றில் கிடக்கிற கல்லை எடுக்கமாட்டாதவன் ஞானத்தை எப்படி அறிவான்...

சோற்றில் உள்ள சின்னக் கல்லை வைத்து உலக அறிவை உணர்த்தும் வகையில் அமைகிறது இந்த பழமொழி. சோற்றில் உள்ள கல் நாம் திரும்பத்திரும்ப சந்திக்கும் தவிர்க்கக் கூடிய ஒரு சின்னத் துன்பம். அதை முழுவதும் நீக்க வேண்டுமானால் அதன் மூலப்பொருளான அரிசியில் உள்ள கற்களை நன்றாகப் பொறுக்கியும் அரிசியை நன்கு களைந்தும் சமைக்க வேண்டும்.

சோற்றில் இருக்கும் கல் போல மனிதனது தினசரி வாழ்வில் சிறுசிறு துன்பங்கள் நேர்வதுண்டு. அரிசியைக் களைவதற்குச் சோம்பல்பட்டுச் சோற்றில் இருக்கும் கல்லைக் கூட நீக்காமல் முழுங்கும் ஒருவன், தன் வாழ்வில் ஒழுக்கக் கேடுகளின் மூலம்

வரவழைத்துக் கொள்ளும் சிறுசிறு துன்பங்களை அறிந்து அதனைத் தடுக்கும் ஞானம் என்னவென்று தெரிந்து கொள்ளாமலே இருப்பான்.

மேற்கூறிய பழமொழி சோம்பலோடு வாழும் ஒருவன் சந்திக்கும் இன்னல்களை எடுத்துரைக்கின்றது. எனவே நாம் சோம்பலின்றி வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

***வெந்து கெட்டது முருங்கை***
***வேகாமல் கெட்டது அகத்தி...***

முருங்கைக் கீரையை அதிகம் வேக வைத்தால் அதன் சத்துக்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். ஆனால் அகத்திக் கீரையை அதிகம் வேகவைக்காமல் பயன்படுத்தினால் முழுமையாக அதன் சத்துக் கிடைக்காது. இப்பழமொழி உணவே மருந்து என்பதை உணர்த்துகின்றது.

***ஆ. ஜான்சி***
***இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு***

***எடுப்பார் மழுவை தடுப்பார் புலியை***
***கொடுப்பார் அருமை***

மழு என்பது பழுக்கக் காய்ச்சிய இரும்பு. அதையும் கையால் பிடிப்பவர் உண்டு. கொல்லும் இயல்பை உடைய புலியைக் கூட தடுப்பவர் உண்டு. ஆனால் செயலில் எளிதாக உள்ள ஈகையைச் செய்பவரைக் மட்டும் காண்பது அரிது.

அருஞ்செயல்களைக் கூட எளிதாக ஆற்றுபவர்கள் உண்டு. ஆனால் ஈகையாகிய எளிய செயலைச் செய்பவர் குறைவு என்பதை இப்பழமொழி உணர்த்துகின்றது.

***ஸ்ரீவித்யா***
***இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு***

## ஒழுக்கமே உயர்வு

பச்சைப் பசேலென்று மரங்கள் நிறைந்த சாலை... மரங்களில் பூத்துக் குலுங்கும் அழகிய மலர்கள்... இயற்கை எழில் கொஞ்ச அமைந்த அழகிய சிற்றூர் தேவபாண்டலம். தேவர்களும் பாண்டவர்களும் இவ்வூரில் வாழ்ந்ததால் இவ்வூர் தேவபாண்டலம் என அழைக்கப்பட்டதாக ஊர்ப் பழங்கதை பேசுவோர் கூறுவதுண்டு.

இவ்வூரில் முனியன் என்னும் விவசாயி வாழ்ந்து வருகின்றார். மனைவி லட்சுமி, மகள்கள் தமிழ், குயில், மகன் எழிலன் என அவனது குடும்பம் அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்து இருந்தது.

முனியன் விவசாயி என்றாலும் தேவபாண்டலத்தின் நீர்வளமும் நிலவளமும் அவரை அவ்வூரின் செல்வந்தர்களில் ஒருவராகவும் ஆக்கிவிட்டிருந்தது.

பணம் பலரின் அழிவுக்கும் காரணமாக அமையும் என்பார்கள். அதுபோலவே, முனியனின் பணக்காரத்திமிர் அவனை ஒழுக்கத்தில் இருந்துத் தவறச்செய்தது. இதனால் இந்திரன் போல பெண்களின் மீது தீராத மோகம் கொண்டு அலைய ஆரம்பித்தான் முனியன். பல்வேறு தீய பழக்கங்களுக்கு அடிமையான முனியன் நாளடைவில் நோய் வாய்ப்பட்டு இறந்தே போனான்.

முனியன் இருக்கும் சொத்தையெல்லாம் அழித்துவிட்டு இறந்து போனதால் அவனது குடும்பம் வாழ்வதற்கு வழியின்றி கலங்கிநின்றது. கணவன் இறந்த அதிர்ச்சி, வறுமை, நோய் என எல்லாம்

சேர்ந்து வாட்டியெடுக்க லட்சுமியும் குழந்தைகளை அனாதையாய் விட்டுவிட்டுக் காலமாகிவிடுகிறாள்.

அம்மாவையும் அப்பாவையும் அடுத்தடுத்துப் பறிகொடுத்த குழந்தைகள் செய்வதறியாது திகைத்தன. அப்போது எழிலன் ஐந்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தான். அவன் சிறுவனாய் இருந்தாலும் தம் குடும்பத்தின் மீது அக்கறையும் பொறுப்பும் கொண்டவனாய் இருந்தான். முனியனின் பொறுப்பற்ற செயல்களைக் கண்டு வெறுத்த எழிலன் இயல்பாகவே தன்னைப் பொறுப்பானவனாக வளர்த்துக் கொண்டிருந்தான். அதனால் அந்த இளம் வயதிலேயே தன் குடும்பச் சுமையையும் சுமக்கத் தொடங்கினான்.

படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய எழிலன் குடும்பச்சூழலின் காரணமாகத் தன் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே கைவிட்டு அதே ஊரில் ஒரு இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடையில் வேலைக்குச் சேர்கிறான். தான் படிப்பைக் கைவிட்டாலும் தன் அக்காக்கள் படிக்க வேண்டும் என்று விரும்பிய அவன் அவர்களுக்காகக் கடுமையாக உழைக்கின்றான். வேலையை நன்றாகக் கற்றுக்கொண்டு அதே ஊரில் தன் முதலாளியின் உதவியோடு, ஒரு இருசக்கர வாகனம் பழுதுபார்க்கும் கடையையும் நடத்தத் தொடங்கினான். எழிலனின் உழைப்பை எண்ணி மகிழ்ந்த முதலாளியும் அவனுக்குப் பல்வேறு நிலைகளில் உதவினார்.

உழைப்பினால் உயர்ந்த எழிலன் தன் அக்காக்களில் ஒருவரை ஆசிரியராகவும் மற்றொருவரை மருத்துவராகவும் உருவாக்கினான்.

ஒருநாள் எழிலனின் பள்ளித்தோழன் மகி அவனைக் காண வருகின்றான். மருத்துவப் படிப்பை முடித்து வெளிநாட்டில் பணிபுரியும் மகி விடுமுறைக்காகச் சொந்த ஊருக்கு வந்திருந்தான். அவன் வெளிநாட்டில் தனக்குக் கிடைத்த அனுபவங்களை எழிலனுடன் பகிர்ந்து கொண்டான். அதோடு பெண்களைப் பற்றி மிக இழிவாகப் பேசிய அவன் எழிலனைத் தவறான பாதைக்கு இட்டுச்செல்லவும் முயற்சிக்கிறான்.

ஒழுக்கத்தில் சிறந்த எழிலன் மகியின் செயல்களை அறவே வெறுக்கிறான். தன் நண்பனைத் திருத்தும் முயற்சியிலும் ஈடுபடுகிறான். ஆனாலும் மகி திருந்த மறுக்கிறான். பல்வேறு தீய பழக்கங்களுக்கு ஆளான மகி இறுதியில் தீராத நோய்க்கு ஆளாகி மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இறந்து போகிறான். எழிலன் ஏழையாக இருந்தாலும் ஒழுக்கத்தில் சிறந்து, பண்பால் உயர்ந்து, பெண்மையைப் போற்றி வாழ்கிறான். உழைப்பால் உயர்ந்த அவனது வாழ்க்கை சமுதாயத்தில் பாதை தவறிய இளைஞர்களுக்குப் பாடமாய் அமைகின்றது.

வாழ்க்கையில் ஒழுக்கமே சிறந்தது என்பதை எழிலனின் வாழ்க்கைக் கற்றுத் தருகின்றது.

*வெ. பராசக்தி*

***இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு***

## விடைதேடும் விடுகதைகள்...

1. முத்து வீட்டுக்குள்ளே தட்டுப் பலகை அது என்ன?
2. மண்ணுக்குள் கிடப்பவன் மங்களகரமானவன் அவன் யார்?
3. தலையைச் சீவினால் தாகம் தீர்ப்பான் அவன் யார்?
4. விழிக்கும் வரை அமைதிமயம் விழித்துவிட்டால் பிரளயம் அது என்ன?
5. எவர் கையிலும் சிக்காத கல் அனைவரிடத்திலும் கிடைக்கும் கல் அதிர்ச்சியில் மறையும் கல் அது என்ன?
6. கடலிலே கரைந்த பூ. நிலத்திலே பிரிந்த பூ. வீட்டிலே நிறைந்த பூ. சமையலுக்கு உதவும் பூ எது?
7. வருடம் ஒருமுறை மட்டுமே வரும் பசி என்ன பசி?
8. வயதான பலருக்கு புதிதாக ஒரு கை அது என்ன?

**விடைகள்**

1. நாக்கு
2. மஞ்சள்
3. இளநீர்
4. எரிமலை
5. விக்கல்
6. உப்பு
7. ஐப்பசி
8. வழுக்கை

*கி. வனிதா*

**இளங்கலைத் தமிழிலக்கியம் மூன்றாமாண்டு**

## அருந்தமிழ் அறிவோம்!

| | | |
|---|---|---|
| நாரி | - | பெண் |
| அரி | - | திருமால், கிளி, சிங்கம் |
| பெண்ணை | - | பனைமரம் |
| சென்னி | - | தலை |
| வேலை | - | கடல் |
| தரணி | - | உலகம், அண்டம், ஞாலம் |
| உலுவை | - | புலி |
| சேய் | - | குழந்தை |
| அல்லல் | - | துன்பம் |
| மெய் | - | உண்மை |
| சவம் | - | பிணம் |
| பிணி | - | நோய் |
| நமன் | - | எமன் |
| புரவி | - | குதிரை |

அ. பர்ஸானா
அ. ஸ்டெல்லாமேரி
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## நூல் அறிவோம்

நூலின் பெயர்: 'வனவாசம் வந்த தென்றல்'

ஆசிரியர் : கீர்த்தி

பத்து சிறுகதைகளைக் கொண்ட இந்நூலினை மணிமேகலை பதிப்பகம் 2004 ஆம் ஆண்டில் பதிப்பித்துள்ளது.

செய்யுள் நடையிலே இல்லாமல் வனவாசம் வந்த தென்றல் என்னும் நூல் சிறுகதை வடிவில் அமைந்துள்ளதால் படிப்பதற்கு ஆர்வம் கூட்ட வல்லதாக உள்ளது. மேலும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் புரியும் நடையில் இருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

இந்த நூலின் ஒவ்வொரு சிறுகதையின் தொடக்கத்திலும் இயற்கை பற்றிய வருனனை அழகாக மனதைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. ஒரு இரவு நேரத்தில் இடி, மின்னலுடன் கூடிய மழை பொழிகிறது என்பதை மிக அழகான மொழிநடையில்,

> **"அண்டம் முழுக்க இடித்து விழுந்த மாதிரி இரவு பூராய் ஒரே மழை. கொட்டும் மாரியின் சலசலப்போடு கூட இடியும் மின்னலும் சேர்ந்து கொண்டதும் பூமித்தாய் 'ஓ' என்று அலறிக் கொண்டிருந்தாள்"**

என்று வருணிக்கப்பட்டுள்ளது. இந்த வருணனையில் மழையின் காட்சிகளை நம் கண்முன்னே கொண்டு வந்துவிடுகிறார் நூலின் ஆசிரியர்.

இந்த புத்தகத்தில், வனவாசம் வந்த தென்றல், பாரச்சுமை, சில்லறைப் பணம், மீரா எங்கே போகிறாள், போர்ப்பாசறை, ஒரு அஸ்தமனமும் இன்னுமொரு உதயமும், ஒரு போராளியின் பாதங்களகள், பிராயசித்தம், கொழுகொம்பு என்னும் பத்து

தலைப்பில் சிறுகதைகள் அமைந்துள்ளன. இதிலுள்ள முதல் சிறுகதையின் பெயரே நூலின் தலைப்பாக வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு சிறுகதையும் ஒவ்வொரு சூழ்நிலையை மையமாக வைத்து எழுதப்பட்டுள்ளது. இவ்வாறு எழுதியிருப்பதிலும் ஒரு நன்மை உள்ளது. அனைத்துச் சிறுகதைகளும் ஒரே மாதிரியாக இருந்தால் படிப்பவர்களுக்கு ஆர்வம் குறைந்துவிடும். எனவே அனைவரையும் கவர வேண்டும் என்ற எண்ணத்தோடு கவிஞர் கீர்த்தி தெளிவாக ஒவ்வொரு சிறுகதைகளையும் வெவ்வேறு பொருண்மையில் எழுதியுள்ளார். இந்தக் கதைகளைப் படிக்கும்போது, வெள்ளித் திரையாகக் காட்சிகள் மனதில் ஓடுகின்றன.

ஒருசில கதைகளில் உள்ள வாசகங்கள் படிப்பவர்களைக் கண்கலங்க வைக்குமாறு உணர்ச்சிபொங்கும் வகையில் அமைந்துள்ளன. இதிலுள்ள ‘போர்ப்பாசறை’ என்னும் கதையைப் படிக்கும்போது கவிஞர் கீர்த்தி எழுதியுள்ள உணர்ச்சி பொங்கும் சொல்நடையில் என்னை அறியாமலேயே என் கண்களின் ஓரத்தில் அரும்பும் கண்ணீர்த் துளிகளை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

**வனவாசம் வந்த தென்றல்**

இந்த நூலின் முதல் கதை வனவாசம் வந்த தென்றல். இக்கதையின் முக்கிய கதாபாத்திரம் மல்லிகா, மாதவன் ஆவர். இவர்கள் இருவரும் வீட்டிக்குத் தெரியாமல் காதலித்துத் திருமணம் செய்துகொண்டனர். இவர்களுக்குத் திருமணத்திற்குப் பின்னர்தான் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு கஷ்டமும் தெரியவருகிறது.

காதலின் காரணமாக மல்லிகா முதலில் தன் தந்தயை இழக்கிறாள். பின்னர் அவளது தாயும் சகோதரனும் அண்டை வீட்டாரின் கேலிப்பேச்சினைப் பொறுக்க முடியாமல் வேறு ஊருக்குச்

சென்றுவிடத் தன் உறவுகளையும் இழக்கிறாள். இறுதியாகக் குடிப்பழக்கத்தின் காரணமாகத் தன் கணவனையும் இழக்கிறாள். மல்லிகா எல்லா இன்னல்களையும் தாண்டி, தன் குழந்தையைப் படிக்கவைத்து நல்ல வேலைக்கு அனுப்ப வெண்டும் என்ற ஒற்றை எண்ணத்தைச் சுமந்து தன் வாழ்க்கையை நகர்த்துகிறாள்.

இந்த கதையின் மூலம் காதலித்துத் திருமணம் செய்தவர்களில் ஒரு சிலர்தான் மகிழ்ச்சியாக உள்ளனர் என்றும் பாதிக்கு மேற்பட்டோர் கஷ்டத்தைத்தான் அனுபவிக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது.

தாய் தந்தையர் எத்தனையோ கனவுகளோடு தன் பிள்ளைகளை வளர்கிறார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் பிள்ளைகள் எடுக்கும் ஒரு தவறான முடிவினால் பெற்றோர்படும் துன்பங்கள், அவலங்களைக் கூறும் இந்தக் கதை படிப்பவரின் மனதில் ஆழப் பதிந்துவிடுகிறது. இது கதை மட்டுமல்ல சமுதாயத்தில் பலரது வீட்டில் நடக்கும் உண்மைச் சம்பவமாகவும் இருக்கிறது.

மேலும் இப்புத்தகத்தில்,

- தான் பெற்ற பாரச்சுமையால் உருவான கரு
- இளம் வாலிபனின் வாழ்க்கை நிலை
- விட்டுக்கொடுத்ததால் ஏற்பட்ட மாற்றம்
- தன் தங்கையின் இழப்பிற்காக இராணுவத்தில் சேர்ந்த போர்ப் பாசறை
- பண ஆசைகொண்ட தாயின் பேச்சைக் கேட்டுத் தன் காதலியை விட்டுக் கொடுத்ததால் ஏற்பட்ட நிகழ்வு

என வாழ்கையின் சூழ்நிலைகளை மையமாக வைத்துச் சிறுகதைகளை அமைத்திருக்கிறார் கவிஞர் கீர்த்தி.

மொத்தத்தில் படிப்போரின் மனமாகிய வனத்தில் வாசம் வீசும் தென்றலாய் அமைகிறது இந்த **வனவாசம் வந்த தென்றல**...

அ. பர்ஸானா
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு



ஆ. வள்ளி
இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## *சிரிப்போ சிரிப்பு*

ரமேஷ் : அம்மா வாரங்கன்னு தெரிந்ததுமே என் பொண்டாட்டி ரொம்ப குஷியில இருக்கா

சுரேஷ் : அட! உன் பொண்டாட்டிக்கு மாமியார் மேல அவ்வளவு பிரியமா?

ரமேஷ் : நீ வேற வரப்போறது அவ அம்மா!

—— • ——

அப்பா : அப்பா சொன்னா கேட்கணும்! இல்லாட்டி நீ உருப்படவே மாட்ட...

மகன் : அதை இப்போ நினைச்சு என்ன பிரயோஜனம்? தாத்தா சொல்லும்போது நீங்க கேட்டிருக்கணும்...

—— • ——

கேள்வி : ஆறும் ஆறும் சேர்ந்தால் என்ன வரும்?

பதில் : வெள்ளம் வரும்!

—— • ——

நோயாளி : வயிறு எரியுது டாக்டர்!

டாக்டர் : எப்ப இருந்து?

நோயாளி : பல்லை முழுங்கினதுல இருந்து!

***வே. குணசேகரி***
***மூன்றாமாண்டு தமிழிலக்கியம்***

***அ. ஸ்டெல்லாமேரி***
***இளங்கலைத் தமிழிலக்கியம் இரண்டாமாண்டு***

## சொல்லோடு விளையாடு...

இன்தமிழ்ச் சொல்நூறு... இதில் ஒளிந்திருக்கும் சொல் கூறு!

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| டே | ளி | தூ | தி | ங் | க | ள் | யி | மு |
| ங் | ரை | நூ | ப | நி | ர் | து | னு | கு |
| டு | சோ | தி | நி | ங் | ளி | ர | ர | மீ |
| க் | ஐ | ப் | ப | சி | கு | றை | த் | கை |
| ள | நை | மு | வை | கா | சி | னி | டை | நை |
| சூ | ளி | டு | து | ல் | ரை | தி | த் | சி |
| வை | சூ | ள் | று | வே | கி | நு | ந் | கு |
| கை | க | யி | ப | ப் | னி | மு | னி | றை |
| ள | ஞா | ரை | ப | றை | தி | ல் | ஞா | செ |

**குறிப்பு :**

ஒளிந்திருக்கும் சொற்களைக் கண்டறிவோர் அடுத்த இதழுக்கு அவற்றைத் தரலாம். மிகுதியான சொற்களைத் தந்தவருடைய விடைகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

*வெ. வேதவள்ளி*
*இளங்கலைத் தமிழிலக்கியம்*
*மூன்றாமாண்டு*

# பார்வையற்றோருக்கான ஒளிவிளக்கு லூயி பிரெயில்



பிறப்பு : கூப்விரே, பிரான்ஸ்
சனவரி 4, 1809.

லூயி பிரெயில் தனது மூன்றாவது வயதில் ஒரு தையல் ஊசியை வைத்து விளையாடும் போது எதிர்பாராத விதமாக ஒரு கண்ணில் காயம் ஏற்பட்டது. உரிய மருத்துவம் செய்யாததால் அக்கண்ணின் பார்வையை இழக்க நேரிட்டது. பரிவுக் கண்நோயால் பாதிக்கப் பட்டதால் மற்றொரு கண்ணின் பார்வையும் இழந்தார்.

பார்வையை இழந்ததால் கல்வி பயில சிரமப்பட்ட லூயி பிரெயில் பார்வையற்றவர்களுக்கான பிரெயில் எழுத்தை உருவாக்கினார். பிரெயில் எழுத்து என்பது பார்வையற்றவர்கள் தடவிப் பார்த்துப் படிக்க ஏற்ற முறையில் அமைக்கபெற்ற எழுத்து முறையாகும். பிரெயில் முறையில் ஒன்று முதல் ஆறு புடைப்புப் புள்ளிகளையும் ஓட்டைகளையும் கொண்ட எழுத்துகளாகும்.

உலக நாடுகள் பலவும் இவரது படம் பொறித்த அஞ்சல் தலை மற்றும் நினைவு நாணயங்கள் வெளியிட்டு பெருமைப்படுத்தியது. இந்திய அரசும் இரண்டு ரூபாய் நாணயத்தில் இவரது படத்தைப் பொறித்து வெளியிட்டுள்ளது.

## பாரதி நாள் விழா

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் தமிழ்த் துறையும் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் மொழித்துறையும் இணைந்து 11.09.2018 அன்று பாரதி நாள் விழாவினைக் கொண்டாடின. இவ்விழாவின் சிறப்பு விருந்தினராக புதிய தலைமுறையின் ஆசிரியர் மாலன் அவர்கள் பங்கேற்றார். பாரதியின் வரலாற்றைத் தமிழுலகிற்குத் தந்த தலைசிறந்த பாரதியியல் அறிஞர் சீனி விசுவநாதன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்றது விழாவிற்கு மிகுந்த சிறப்பினைத் தந்தது.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் ய. மணிகண்டன் அவர்கள் தலைமையுரை வழங்க, சோகா இகெதா கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் திருமதி சே. கண்மணி அவர்களின் அறிமுக உரையோடு விழா சிறப்புறத் தொடங்கியது.

தமிழகத்தின் தலைசிறந்த பத்திரிக்கையாளர், எழுத்தாளர், படைப்பாளர் எனப் பன்முக ஆளுமைகளைக் கொண்ட மாலன் அவர்கள் "பாரதி சேர்த்த செல்வங்கள்" என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில் பாரதி தமிழுலகிற்குச் சேர்த்து வைத்தப் பல அரிய இலக்கியச் செல்வங்களை மாணவர் மனதில் பதியும்படி எடுத்துரைத்தார்.


விழாவில் இருதுறை மாணவர்களும் பாரதியாரைப் பற்றிய கவிதை, உரை, பாடல்கள் என அரங்கினை பாரதியால் நிறைத்து மகிழ்ந்தனர்.






நற்றமிழ் நங்கையாய்

வளர்வாள்...



மு.துர்கா

முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு